# இப்போது யார் வேண்டுமானாலும் தடுப்பூசி பெறலாம்

## கோவிட்-19 தடுப்பூசி ஏன் முக்கியமானது?

கோவிட்-19 க்கு எதிராக தடுப்பூசி **பாதுகாக்கிறது**.
அதிக எண்ணிக்கையிலாக மக்களுக்கு தடுப்பூசி போட்டால் :

- நோய்வாய்ப்பட்டவர்கள் குறைவாக இருப்பார்கள்.
- இன்னும் **குறைவாகவே இறப்புகள்** இருக்கும்.

## நான் அவசியம் தடுப்பூசி போட வேண்டுமா?

இல்லை, நீங்கள் கட்டாயமாக இதை செய்ய வேண்டியதில்லை.
நீங்கள் தடுப்பூசி போடுவதற்கும் போடாமலிருப்பத்திற்கும் உங்களுக்கு உரிமையுண்டு.

## நான் பணம் செலுத்த வேண்டுமா?

இல்லை, தடுப்பூசி அனைவருக்கும் **இலவசம்**.

## தடுப்பூசி பாதுகாப்பாகவும் பயனுள்ளதாகவும் இருக்கிறதா?

ஆம், தடுப்பூசி பாதுகாப்பானது. இது பயனுள்ளதாக இருப்பதாகவும் ஆய்வுகள் காட்டுகின்றன. **மருந்து நிபுணர்கள் சுவிட்சர்லாந்தில் தடுப்பூசிக்கு அங்கீகாரம் அளித்துள்ளனர்.**
அவர்கள் தடுப்பூசிகள் மற்றும் அவற்றின் விளைவுகள் குறித்து ஆய்வு செய்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்களை வைத்து ஆய்வுகள் நடந்துள்ளன. உலகம் முழுவதும் ஏற்கனவே கோடிக்கணக்கான மக்களுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

## தடுப்பூசி ஏதேனும் எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்துமா?

**எந்தவொரு தடுப்பூசி**யையும் **போல** எதிர்மறையான விளைவுகளை இது ஏற்படுத்தலாம்.

பெரும்பாலும், இது **சோர்வு, தலைவலி அல்லது காய்ச்சல்** ஆகியவைகளாக இருக்கலாம். ஊசி போடப்பட்ட இடத்திலும் உங்களுக்கு வலி ஏற்படலாம். தடுப்பூசி ஏற்படுத்தக்கூடிய சாதாரண எதிர்மறையான விளைவுகள் இவையாகும். இந்த எதிர்மறையான விளைவுகள் லேசானவை மற்றும் இவை நீடிக்காது.

**மிகவும் அரிதான சூழ்நிலைகளில்,** இன்னும் அதிக தீவிரமான எதிர்மறையான

விளைவுகள் சாத்தியமாகும். உதாரணமாக, ஒரு ஒவ்வாமை எதிர்வினை இருக்கலாம். ஆனால் தடுப்பூசி போட்ட உடனேயே இது நிகழ்கிறது. இந்த சமயத்தில் நீங்கள் சுகாதார நிபுணர்களுடன் இருக்கிறீர்கள்.

## எனக்கு ஏற்கனவே COVID-19 இருந்தது, நான் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டுமா?

ஆம், **ஆறு மாதங்களுக்கு முன்பு** நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்தால் தடுப்பூசி போடுங்கள்.

## யார் தடுப்பூசி போடக்கூடாது?

**தடுப்பூசியில் காணப்படும் பொருட்களுக்கு உங்களுக்கு ஒவ்வாமை** இருந்தால் நீங்கள் தடுப்பூசி போடக்கூடாது. நீங்கள் தடுப்பூசி போடுவதற்கு முன்பு யாராவது உங்களிடம் கேள்விகள் கேட்பார்கள்.

## நான் எங்கு சென்று தடுப்பூசி போடவேண்டும்?

நீங்கள் ஒரு **மருந்தகத்தில்** அல்லது **மருத்துவரிடம்** தடுப்பூசி போடலாம்.

நீங்கள் ஒரு பெரிய **தடுப்பூசி மையத்திற்கோ**, மருத்துவமனைக்கோ அல்லது போ லியு மாநாட்டு மையத்திற்கோ (லொசான்) செல்லலாம்.

மேலும், ஒரு குழு **உங்கள் பகுதிக்கு** பயணிக்கும்.

மேலும் இதைக்குறித்து கண்டுபிடிக்க உங்கள் அருகிலுள்ள அறிவிப்புகளைப் பார்த்து உங்களுக்குத் தெரிந்த சங்கங்களிலிருந்து தகவல்களைப் பெறுங்கள்.

## எவ்வாறு சந்திக்கும் நேரத்தை நிர்ணயிக்கலாம்?

இந்த எண்ணை நீங்கள் அழைக்கலாம்:
**058 715 11 00**
உங்கள் மொழியைப் பேசும் எவரும் உங்களை பதிவு செய்யலாம்.

இந்த **இணைய முகவரியிலும்** நீங்கள் பதிவு செய்யலாம்: **www.coronavax.ch**

## தடுப்பூசி எவ்வாறு நடக்கிறது?

உங்களுக்கு ஏதேனும் ஒவ்வாமை இருக்கிறதா அல்லது நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்களா என்பதைக் கண்டுபிடிக்க யாராவது முதலில் உங்களிடம் கேள்விகளைக் கேட்பார்கள்.

பின்னர், கையின் மேற்பகுதியில் நீங்கள் **ஒரு ஊசியைப்** போட்டுக்கொள்ளலாம் .

புறப்படுவதற்கு முன்னர், **15 நிமிடங்கள்** நீங்கள் **காத்திருக்க** வேண்டும்.

இதற்கு முன்பு உங்களுக்கு கோவிட் வந்திருந்தால் தவிர, ஒரு மாதத்திற்குப் பிறகு உங்களுக்கு இரண்டாவது ஊசி தேவை. அதேயிடத்தில் இரண்டாவது ஊசியை போட்டுக்கொள்ளுவதற்கு, நீங்கள் ஒரு சந்திப்பை நிர்ணயம் செய்வீர்கள்.

**முக்கியம்:** உங்களுக்கு காய்ச்சல் இருந்தால் அல்லது நோய்வாய்ப்பட்டதாக இருந்தால், தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு வர வேண்டாம். முதலில் கோவிட்-19 சோதனையை செய்யுங்கள்.

## தடுப்பூசி போட்டபின், நான் தொடர்ந்து முகமூடியை அணிய வேண்டுமா?

ஆம். இப்போதைக்கு, **எல்லோரும்** தொடர்ந்து நிர்ணயிக்கப்பட்ட விதிகளை பின்பற்ற வேண்டும்.

எனவே முகமூடியை அணிவதும் தூரத்தை மதிக்கப்படுவதும் **மிகவும் முக்கியம்**. தடுப்பூசி போடாத மக்களைப் பாதுகாக்க இது சிறந்த வழியாகும்.

## தடுப்பூசிக்குப் பிறகு நான் பயணம் செல்லலாமா?

ஆம், ஆனால் நீங்கள் செல்ல விரும்பும் நாட்டில் உள்ள விதிகளைப் பற்றி நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும்.

## தடுப்பூசி பற்றி எனக்கு இன்னும் கேள்விகள் உள்ளன...

இந்த எண்ணை நீங்கள் **அழைக்கலாம்:**
**058 715 11 00**

நீங்கள் **www.vd.ch/corona-multilingue** இல் 9 வெளிநாட்டு மொழிகளில் தகவல்களைக் காணலாம்.

இந்த க்யூ ஆர் குறியீட்டையும் நீங்கள் ஸ்கேன் செய்யலாம்.